16th March 1955]

MR. SPEAKER :—" I shall now put the Demand to the vote of the House. The question is—

' That the Government be granted a sum not exceeding Rs. 5,50,71,100 under Demand XXVII—Electricity.' "

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER :—" *Re* Demand XXXVIII—Capital Outlay on Electricity Schemes. May I know whether hon. Member Sri K. C. Gopalan Unni is withdrawing his Cut Motion? " 1-20 p.m.

* SRI K. C. GOPALAN UNNI :—" The Hon. Minister has not given us, during the course of his speech, any hope. May I know once again whether the Hon. Minister holds any hope for Malabar district before the Kundah Scheme is taken up? "

* THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" Yes, we have got lot of schemes. I want the hon. Member to meet me and tell me categorically what are all the schemes he wants to be taken up. Because the hon. Member was talking in Malayalam language, I could not reply to the points raised by him as elaborately as I would wish to."

SRI K. C. GOPALAN UNNI :—" I am not pressing the Cut Motion moved by me."

The Cut Motion moved by hon. Member Sri K. C. Gopalan Unni, was by leave of the House, withdrawn.

MR. SPEAKER :—" I shall now put the main Demand to the vote of the House. The question is—

' That Government be granted a sum not exceeding Rupees 11,78,64,500 under Demand XXXVIII—Capital Outlay on Electricity Schemes.' "

The Demand was put and carried and the Grant was made.

(3) DEMAND XXXII—COMMUNITY DEVELOPMENT PROJECTS.

MR. SPEAKER :—" Before the Hon. Minister moves the Demand for Grant under Community Development Projects, I would like to inform the House that we shall be sitting till 1·45 p.m. to-day. The time allotted for discussion on this Demand has been increased. The time allotted for Demand XIV—Police which will be taken up to-morrow has been reduced from 3 hours to 2 hours. We will take up Police Demand to-morrow at 12 noon and finish it by 2 p.m. Discussion under this Demand for Grant under Community Development Projects will be carried on till 12 noon to-morrow. The House will be sitting to-morrow from 8·30 a.m. to 2 p.m.

" The Hon. Minister for Agriculture will now move the Demand for Grant under Community Development Projects."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Mr. Speaker, on the recommendation of the Governor, I move—

' *That the Government be granted a sum not exceeding Rupees 2,68,84,400 under Demand XXXII—Community Development Projects.*'

" Sir, this Demand covers Community Project Schemes, National Extension Schemes, and Local Development Works. As hon. Members are aware, the Demand for Community Projects is Rs. 1,17,01,900; the Demand for National Extension Service is Rs. 61,28,700; and the Demand for Local Development Works is Rs. 89,95,200.' "

MR. SPEAKER :—" Motion moved—

' That the Government be granted a sum not exceeding Rs. 2,68,84,400 under Demand XXXII—Community Development Projects.' "

SRI M. PALANIYANDI :—" Mr. Speaker, I move—

' *That the allotment of Rs. 2,68,84,400 under Demand XXXII Community Development Projects be reduced by Rs.* 100."

MR. SPEAKER :—" Cut Motion moved—

' That the allotment of Rs. 2,68,84,400 under Demand XXXII —Community Development Projects be reduced by Rs. 100.' "

SRI M. PALANIYANDI :—" கனம் சபாநாயகர் அவர்களே, கம்யூனிட்டி ப்ராஜெக்ட்டின் வெட்டுப் பிரேரணையைக்குறித்து பேசும் காலத்தில் நமது மாகாணத்தில் 290 லட்சம் மக்களுடைய பகுதியில் கால் பகுதியில் ஐந்து வருஷ திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது வாஸ்தவம்தான். சென்னை மாகாணத்தில் இப்பொழுது நான்கு கம்யூனிட்டி பிராஜெக்ட்டுகள் இருக்கின்றன. 48 தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. நான்கு டெவலப்மெண்ட் வொர்க்ஸ் நடைபெற்று வருகின்றன. எங்களுடைய பகுதிகளில் லோகல் டெவலப்மெண்ட் வேலை நடந்துகொண்டு வருகிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஐந்து வருஷத் திட்டத்தில் கால் பகுதியையாவது முதல் ஐந்து வருஷத்திற்குள் முடித்துவிடவேண்டும் என்று திட்டம் போட்டு ஒரு வருஷத்திற்கு முன்பாகவே நிறைவேற்றி விட்டதாகச் சொல்லப்படுகிறது. இருந்தாலும் மக்களுடைய எண்ணங்கள் அதில் பூர்த்தியாகிவிட்டதா என்று பார்த்தால் அவ்வளவாக பூர்த்தி யாகவில்லை. மக்களுக்குள்ள முக்கியமான தேவைகளை பூர்த்தி செய்து விட்டார்களா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். பணம் அதிகமாக செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அந்தப் பணத்தில் அதிகப்படியான பணம் நிர்வாகச் செலவிற்குத்தான் செலவாகி இருக்கிறது. பணம் பூராவையும் மக்களுடைய உபயோகத்திற்குத்தான் பயன்படுத்தவேண்டும்.

" சாதாரணமாக ஒரு ரோடு போடவேண்டுமென்றால் அதற்கு ரூ. 5,000 செலவாகலாம். அதில் பாதியை, அதாவது ரூ. 2,500-ஐ அரசாங்கம் கொடுக்கவேண்டும் என்றும் கால் பங்கை பஞ்சாயத்து போர்டும், ஜில்லா போர்டும் கொடுக்கவேண்டும் என்றும் கால் பங்கை விவசாயிகள் தங்களுடைய உழைப்பின் மூலமாகவோ அல்லது பணமாகவோ

16th March 1955] [Sri M. Palaniyandi]

கொடுக்கவேண்டும் என்றும் அந்தப் பணத்தை முதலில் டிரஷரியில் கட்டவேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். இந்த நிலைமை அங்கு இயங்கி வருகிறது. அதனால் அவைகளை நிறைவேற்றுவதில் காலதாமத மாகிறது. இன்னும் அதிகமாக மக்களை சேர்த்து அவர்கள் உழைத்து ரோடு போடவேண்டும். கால் பங்கு செலுத்தவேண்டும் என்று சொல் வதனால் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் ஒரு வேலையை முடித்துக் கொடுக்க பல ஆண்டுகளாகின்றன. இப்பொழுது மக்கள் உழைக்கத் தயாராக இருக்கிறார்கள். வேலையை ஆரம்பிப்பதற்குள் பஞ்சாயத்து போர்டை பணத்தை ட்ரெஷரியில் கட்டச் சொல்லுகிறார்கள். அதன் பிறகுதான் வேலை செய்யவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். அதனால் பல தொந்தரவுகள் ஏற்படுகின்றன. அங்கங்கே கடன் வாங்குவதாக இருந்தால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. மக்களுடைய ஒத்துழைப்பு இல்லாவிட்டால் வேலை நடக்காது. வேலைகள் தூங்கிக்கொண்டுதானிருக் கும். அப்படி இருக்கக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். கால் பங்கு பணத்தைக் கொடுப்பதற்கு பதிலாக கிராமத்தார்கள் வேலை செய் யத் தயாராக இருக்கிறார்கள். ரோடுகளை போட்டுக்கொடுக்கிறோம் என் றும் சொல்லுகிறார்கள். ஒரு ரூபாய் என்று சொல்லி அவர்களுக்கு எட்டணா கூலி கொடுத்து எட்டணாவுக்கு வேலை வாங்கினால் அவர்கள் அதற்கு ஒத்துழைக்க தயாராக இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு எட்டணா கூலியும் கிடைக்கிறது. எட்டணா வேலையும் சர்க்காருக்குக் கிடைக்கிறது. அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் கொஞ்சம் குறை கிறது. இப்படிச் செய்யாமல் கண்ட்ராக்ட்டுக்கு விட்டால் கம்யூனிட்டி ப்ராஜெக்ட் வேலைகளும் லோகல் டெவலப்மென்ட் வேலைகளும் ஈடே றாது, கண்ட்ராக்டருக்குத்தான் பணம் போய்ச் சேரும். அதனால் நான் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த வேலைகளையெல்லாம் கண்ட் ராக்டுக்கு விடவேண்டாம் என்று. மக்களுக்கு கூலி எட்டணா என்றும் எட்டணாவிற்கு உழைப்பு என்றும் வைத்தால் அவர்கள் மனமுவந்து வேலை செய்ய முன்வருவார்கள். பஞ்சாயத்து போர்ட் பணத்தை கடன் வாங்கி ட்ரெஷரியில் கட்டி அதை கண்ட்ராக்டுக்கு விட்டால், வட்டியும் செலவாகிறது, வேலையும் நடக்காது. கால தாமதம் ஏற்படும். அதனால் பெரிய கஷ்டங்கள் ஏற்படுகின்றன. டால்மியாபுரத்தில் தொழிலாளர்கள் தங்களுடைய ஓய்வு நேரங்களில் ரோடுகள் போடுவதற்கு முன்வந்திருக் கிறார்கள். ரூ. 10,000 செலவில் ரோடு போடுவதாக திட்டமிட்டிருக்கி றார்கள்.

"பத்தாயிரத்திற்கு ரோடு போட திட்டம் போட்டால், சர்க்கார் பணம் கொடுப்பதற்கு அதிக நாள் ஆகிறது. கான்ட்ராக்ட் விட்டால் கான்ட்ரக் டர்கள் ரோடு போட பணம் கடனாக வாங்கி, அதற்கு வட்டி கொடுத்து இந்த ரோட்டு வேலையில் சம்பாதிக்க எண்ணம் கொள்ளுகிறார்கள். அந்த கான்ட்ராக்ட் முறையை தவிர்த்து, மக்களை ஒன்று சேர்த்து, அவர்களுக்கு தேவையான காரியங்கள், ரோடு முதலியன அவர்கள் மூலமாகவே செய்து கொள்ள முடியுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தற்போது கம்யூனிடி ப்ராஜெக்ட் வேலைகளை செய்வதற்கு எப்படி இடங்களை தேர்ந் தெடுக்கிறார்கள் ? நாட்டிலே உற்பத்தி பெருகவேண்டும். இவ்வுற்பத்தி பெருக்கிற்கு சாதகமான இடங்களைத்தான் கம்யூனிடி ப்ராஜெக்ட் வேலை களுக்கு தேர்ந்தெடுக்கிறார்கள் என்று மந்திரியார் அவர்கள் சொன்னார்கள். இதனால் என்ன தெரிகிறதென்றால், நல்ல தண்ணீருள்ள இடங்களைத் தேர்ந்தெடுத்து நெல் சாகுபடி செய்தால்தான் உற்பத்தி பெருக்குவதாக சர்க்கார் நினைக்கிறார்கள். அப்படி இருக்கக்கூடாது. காடாரம்ப பூமி களில் கிணறு வெட்டி தண்ணீர் வசதி செய்தும், நீர்ப் பாசன வசதிகள் அங்கு கொண்டுவந்தும், விளைபொருள்களின் உற்பத்தியைப் பெருக்கவேண் டும். ஏரிகள் ஏற்படுத்தி, காடாரம்ப நிலங்களை சாகுபடி நிலங்களாக மாற்றவேண்டும். அப்போதுதான் உண்மையில் உற்பத்தியைப் பெருக்கு வது ஆகும். நெல் விளையும் பிரதேசத்தைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டு மென்ற எண்ணம் இல்லாமல் சாதாரணமாக ரோடு வசதி அற்ற குடி தண்ணீர் வசதி அற்ற பிற்போக்கான கிராமங்களை இத்திட்ட

[Sri M. Palaniyandi] [16th March 1955

வேலைகளுக்காக தேர்ந்தெடுக்கவேண்டும் என்று சொல்லுகிறேன். உடையார்பாளையம், பெரம்பலூர் தாலூகாக்கள் ரொம்ப பிற்போக்கான தாலூகாக்கள். அப்பகுதிகளில் கிராம மக்களுக்கு எவ்விதமான வசதிகளும் கிடையாது. அத் தாலூகாக்களை இத் திட்ட வேலைகளுக்கு தேர்ந்தெடுக்கலாம். இவ்விதமாகவே நம்மாகாணத்தில் எந்த நெற்பகுதிகள் பிற்போக்காக வசதிகள் குறைவாக இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் இக் கம்யூனிடி ப்ராஜெக்ட் திட்டத்தின்கீழ் கொண்டுவரவேண்டும். புல்லம்பாடி கிராமத்தில் குடிதண்ணீர் வசதியே கிடையாது. அங்கு மக்கள் இக் குடிதண்ணீர் வசதி குறைவினால் நரம்புச் சிலந்தி வியாதியால் அநேகர் கஷ்டப்படுகிறார்கள். கலெக்டர் அவர்கள், அந்தப் பகுதியை பார்வையிட்டு அவ்விடத்திற்கு குடிதண்ணீர் வசதி உடனடியாக செய்ய வேண்டுமென்று ஒப்புக்கொண்டார்கள். அதற்காக பத்தாயிரம் ரூபாயில் ஒரு திட்டம் தயார் செய்து, அவ்வூர் பஞ்சாயத்து போர்டு அதற்காக மூவாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறது. சர்க்கார் ஏழாயிரம் ரூபாய் கொடுத்து அங்கு குடிதண்ணீர் திட்டத்தை சீக்கிரத்தில் நிறைவேற்றவேண்டும். பஞ்சாயத்து போர்டோ, சர்க்காரோ, பணம் கொடுப்பதினாலேயே அத் திட்டம் நிறைவேறிவிடாது. புல்லம்பாடி மக்கள் அத் திட்டத்தை தங்கள் உடல் உழைப்பால் நிறைவேற்ற தயாராக இருக்கிறார்கள். சர்க்கார் அத் திட்டத்திற்கான பணத்தைக் கொடுத்து அம் மக்களுக்கு ஊக்கமளித்தால் அத் திட்டம் சீக்கிரத்தில் நிறைவேறுவதுடன், அங்கிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஓரளவுக்கு போக்கும் என்று சர்க்கார் கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன். இன்னும் சர்க்கார் நன்றாக யோசனை செய்து ஆங்காங்கு இதில் அக்கரை கொண்ட நண்பர்களை அழைத்து, எப்படி இந்த சமூக நலத் திட்டங்கள், லோகல் development திட்டங்கள், ஸ்தல ஸ்தாபன dovelopment திட்டங்கள், இவைகளை எல்லாம் உறுவாக்குவது என்று யோசித்து அவ் விடங்களில் மக்களுக்கு லாபகரமாக இருக்கும்படி அத் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த ஆண்டில் 25 லட்ச ரூபாயில் 36 இடங்களில் நேஷனல் எக்ஸ்டன்ஷன் ஸ்கீமை, வேலை செய்யப்போவதாகத் தெரிகிறது. அப்படி வேலை செய்யும்போது, எந்தெந்த இடங்கள் பிற்போக்கானவை, எங்கே மக்கள் ஒத்துழைப்பு அதிகமாக இருக்கிறது என்று தெரிந்து அவ் விடங்களுக்கு அந்த ஸ்கீமை விஸ்தரிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். புல்லம்பாடியில் இவ்வித திட்டங்களை நிறைவேற்ற இரண்டாயிரம் டால்மியாபுரம் தொழிலாளர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்."

1-30 p.m. **Sri P. G. KARUTHIRUMAN** :—"கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது கனம் மந்திரியார் கொண்டுவந்திருக்கும் மானியத்தை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். இதுவரை நமது சென்னை அரசாங்கத்தில் இதுமாதிரி மானியம் போடுவது இல்லை, பட்ஜெட்டில் சேர்க்கப்படுவதுமில்லை. இந்த மானியத்திற்கு சுமார் மூன்று கோடி ரூபாய் வரை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், இத் திட்டத்திற்கு மக்களிடையே பெருவாரியான ஆதரவும், வரவேற்பும் இருக்கிறதென்பது தான். அதுமட்டுமல்ல, பணத்தை வைத்துக்கொன்டு மாத்திரம் ஒரு காரியத்தைச் செய்துவிடலாமென்று நினைப்பது தவறு. மக்களின் உடல் உழைப்பு, செயல் ஒத்தாசையும் இருந்தால் எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாக நடத்தலாம் என்பதைக் காட்டுவதே இந்த சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் முக்கியத்துவமும் அடிப்படையுமாகும். 1952-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் இவ்வபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. முதல் வருஷத்தில் கணக்கைப் பார்த்தால் அதிகப் பணம் இத் திட்டத்திற்கு செலவழிக்கப்படவில்லை என்பது தெரியவரும். தவிர, புதிதாக, இத்திட்டம் வந்ததால் மக்களுக்கு இத் திட்டத்தை எப்படி உபயோகித்துக்கொள்வது என்பது தெரியாமலிருந்ததால், இத் திட்டத்தின் நிமித்தம் அதிகப் பணம் செலவாகவில்லை. இப்போது பார்க்கும்போது, மக்களிடத்திலே, இத் திட்ட விஷயமாக ஒரு புது விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் மக்கள், 'இந்த தேசம் நம்முடையது, தங்களுக்கு வேண்டிய காரியங்களை,

16th March 1955] [Sri P. G. Karuthiruman]

தாமே செய்துகொள்ளவேண்டும்' என்ற மனப்பான்மை வளர்ந்துகொண்டிருக்கிறது. இந்த எண்ணம் மக்களிடையே முக்கியத்துவம் பெற்றதற்குரிய பெருமையும், கௌரவமும் கனம் விவசாய இலாகா மந்திரியையே சாரும். அம் மந்திரியார் அவர்கள் இடைவிடாது ஆங்காங்கு tour செய்து இத் திட்டத்தின் முக்கியத்துவத்தை மக்கள் மனதில் படியும்படி செய்திருக்கிறார். அவர் இப்படி கடுமையாக tour செய்வதைக் கண்டு எங்கே அவர் உடல் நலம் குன்றிவிடுகிறதோ என்று பயந்து, நான் அவரை அடிக்கடி டாக்டரிடம் தன் உடலை பரிசோதனை செய்துகொள்ளவேண்டுமென்றுகூடச் சொல்லியிருக்கிறேன். அவ்வளவு சுறுசுறுப்பாகவும் திறமையாகவும், வேகமாகவும் அம்மந்திரியார் அவர்கள், கவனித்து வேலை செய்ததின் காரணமாகத்தான் இன்று இத் திட்டம் தீவிரமாக மாகாணமெங்கும் பரவுகிறது, நடக்கிறது. மற்றும் சர்க்கார் அதிகாரிகள் ஊழியர்களிடமும் பொதுமக்களிடமும் எப்படி பழகவேண்டுமென்பதைத் தெரிந்துகொள்ள இத்திட்டம் நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறது. இதுவரையில் ஆளும் ஏகாதிபத்திய வர்க்கமாக இவ்வதிகாரிகள் இருந்ததால் இம்மாதிரியான வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கவில்லை. இப்போது பொதுமக்களிடம் நேரடியாக சர்க்கார் அதிகாரிகள் நெருங்கிப் பழக இந்த சமுதாய அபிவிருத்தி திட்டம் ஒரு பாடமாக இருக்கிறது. அதனால் அதிகாரிகள் தேசத்தின் சுபீட்சத்தை மனதில் கொண்டு பொதுமக்களிடம் நெருங்கிப்பழகுகிறார்கள். அப்படி பழகும் அதிகாரிகள் இருக்குமிடங்களிலெல்லாம் இத் திட்டம் நல்ல பலனைக் கொடுத்திருக்கிறது. எங்கே அதிகாரிகள் பழைய ஏகாதிபத்திய மனப்பான்மையுடன் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் இத் திட்டத்தினால் எவ்வித முன்னேற்றமும் காணமுடியவில்லை. இதை இத்திட்டம் நிறைவேற்றப்பட்டதின் புள்ளி விவரங்களைக்கொண்டு தெரிந்துகொள்ளலாம். இச் சமுதாய அபிவிருத்தி திட்டமானது மிகவும் பலன் தரக்கூடிய உறுதியான ஓர் திட்டமாகும். முதலில் இதன் விவரம் பலருக்குத் தெரியாமல் இருந்தது. இப்போது கிராம மக்கள் இதைப் பற்றி நன்றாக உணர்ந்து பயனடைகிறார்கள். இத் திட்டத்தால் பலருக்குத் தொழில் வசதி ஏற்படுகிறது. ஹரிஜனங்களுக்கு இத் திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டிக்கொள்ள மானியம் அளிக்கப்படுகிறது. மின்சார வசதிகள் கிராமங்களுக்குக் கொண்டுவரப்படுகிறது. மற்றும் இதுபோல் எவ்வளவோ. கிராம மக்களின் வாழ்க்கைக்கு வசதிகள் செய்யப்படுகின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியில் நான் இருக்கும் பகுதியை சமுதாய அபிவிருத்தித் திட்டத்தில் சேர்த்திருக்கிறார்கள். கீழ்பவானி Project-ல் இச் சமுதாய அபிவிருத்தி திட்டத்தை அமுலாக்க 66 லக்ஷ ரூபாய் ஒதுக்கப்பட்டு இப்போது 22 லக்ஷம் வரையில் செலவழிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர்களில் சிலர் இதைப்பற்றி சந்தேகித்து இப்படி மந்திரிகள் செய்வது, ஒரு அரசியல் காரணத்திற்காகத்தான் என்று சொல்லுகிறார்கள். என்னுடைய நண்பர்கள்கூட இப்படித்தான் குறைகூறுகிறார்கள். நான் சொல்லுவது என்னவென்றால், இம்மாதிரியாக அபிவிருத்தி திட்டத்தை என் தொகுதியில்தான் நிறைவேற்றுகிறார்கள் என்ற எண்ணம் வேண்டாம். சமுதாய அபிவிருத்தி திட்டம், Block development திட்டம், ஸ்தல ஸ்தாபன development திட்டம், இப்படியாக ஏதாவது ஒரு திட்டம் அமுலில் இல்லாத இடமே கிடையாதென்று சொல்லுகிறேன்."

RAJA MUTHIAH CHETTIYAR OF CHETTINAD :—" இத் திட்டங்கள் பல இடங்களில் இல்லை."

SRI P. G. KARUTHIRUMAN :—" ஸ்தல ஸ்தாபன அபிவிருத்தி திட்டம் எங்கும் இருக்கிறது. ஆங்காங்கு மக்கள் அத்திட்டத்தை ஏற்றுக்கொண்டு வேலை செய்கிறார்கள். கனம் அங்கத்தினர் தெரியாமல் அப்படி இல்லை என்று சொல்லுகிறார்கள். Block development திட்டத்தின் கீழ் கோயம்புத்தூருக்கு 3 லக்ஷ ரூபாய் முன்பு ஒதுக்கப்பட்டது. முன்பு இருந்த கலெக்டரும், அதிகாரிகளும் மும்முரமாக வேலை செய்யாததால் அத்தொகை செலவழிக்கப்படாமலும், அத்திட்டத்தை கவனிக்காமலும் வைத்திருந்தார்கள். இப்போது இருக்கும் கலெக்டர் உற்சாகமாக வேலை

செய்வதால் இப்போது ஸ்தல ஸ்தாபன அபிவிருத்திற்காக 15 லக்ஷம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மராமத்து இலாகா மந்திரி சொல்லுவதுபோல், எந்த இடத்திலும் அவ்வபிவிருத்தி திட்டத்தின்கீழ் பணம் செலவழிக்கப் படாத இடமே கிடையாது என்று சொல்லுகிறேன். இப்போது போடப்படும் திட்ட **Estimate** எல்லாம் **P.W.D.** யால் போடப்படுகிறது. இத் திட்ட **Estimate** போடப்பட்டு **approval** ஆகி வருவதற்கு அதிக நாள் ஆகிறது. ஆகவே, இந்த சிகப்பு நாடா வியாதியைத் தீர்க்க வழி காண விவசாய மந்திரி அவர்கள் மார்க்கம் செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளு கிறேன். அது மட்டுமல்ல. இப்போது பொது விவாதத்தின்போது எல் லோரும் பேசினுர்கள், அதாவது ஆவடி காங்கிரசில் **Socialistic pattern of Society** உண்டாக்குவதாக தீர்மானம் போட்டுவிட்டார்கள், அதற்கான நடவடிக்கைகள் இச்சர்க்கார் செய்கிறதா என்று கேட்டார்கள். சமுதாய அபிவிருத்தி திட்டமானது சமதர்ம நோக்குடன் கொண்ட சமூதாயத்தை ஏற்படுத்தவே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறேன். **Socialistic pattern of Society** உண்டாக்குவதென்ருல், பணக்காரர் சொத்தைப் பிடுங்கி மற்றவர்களுக்குக் கொடுப்பதல்ல, மாடமாளிகைகளை எடுத்து, மற்ற மக்களுக்கு கொடுப்பதல்ல, ஏழைமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களை நல்ல நிலைமைக்கு கொண்டுவருவதென்பது தான் அதன் அர்த்தம்.''

SRI S. SWAYAMPRAKASAM :—" அப்படிச் செய்ய ஏன் பயப் படுகிறீர்கள்.''

SRI P. G. KARUTHIRUMAN :—" நாங்கள் அப்படி ஒன்றும் பயப் படவில்லை. சமுதாய அபிவிருத்தி திட்டம் என்றால் எல்லோரும் முன் னேற்றம் அடையவேண்டும், பொருளாதாரத்தில் மேன்மையடையவேண்டு மென்ற பாதையில் முன்னேறுவதுதான் அதன் அடிப்படை நோக்கம். ஸ்தல ஸ்தாபன அபிவிருத்தி திட்டம் 75 பேர் கொண்ட கிராமத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இப்படி விஸ்தரிக்கப்பட்டிருப்பதால் சர்க்கார் அதிகாரிகள் கிராம மக்களிடம் தொடர்புகொள்ள நல்ல சந்தர்ப்பம் இருப் பதுடன் மகாத்மா காந்தி சொன்ன சமுதாய அபிவிருத்தி செய்யவும் அவர் மனதில் கொண்ட ராமராஜ்ஜியத்தை உருவாக்கவும் **Socialistic pattern of Society** உண்டாக்கும் தீர்மானத்தை அமுலில் கொண்டு வரவும் வசதியாக இருக்கிறது. மற்றும் கிராம மக்கள் தங்கள் தொழில் களை வளம்பெற செய்வதற்கு சக்தியைக் கொடுக்கிறதென்று சொல்லிக் கொண்டு கம்பர் இது விஷயமாக சொல்லி இருப்பதை எடுத்துக் காட்டி விட்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

" கம்பர் ஒரு பாட்டில் சொல்லுகிறார்—

' கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்விமுற்ற
வல்லாரு மில்லையவை வல்லரல்லாருமில்லை
யெல்லாரு மெல்லாப் பெருஞ்செல்வமு மெய்தலாலே
யில்லாருமில்லை யுடையாருமில்லை மாதோ.'

ஆகவே இந்த மான்யத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.''

* SRI M. DHARMALINGAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சட்டசபை முன்பாகக் கொண்டுவரப்பட்டிருக்கிற சமுதாய நலத்திட்ட, ஸ்தல ஸ்தாபன நலத்திட்ட மானியத்தை ஆதரித்துப் பேச விரும்புவதோடு, சர்க்கார் இத்துறையில் செய்துவரும் காரியங்களுக்காகவும், அவர்கள் காட்டு கின்ற அக்கறைக்காகவும் நான் நன்றி பாராட்டுகிறேன். இந்த இலாக் காவை நிர்வகித்து வருகின்ற மந்திரி அவர்கள் இது விஷயத்தில் ஆழ்ந்த கவனத்தை அக்கறையோடு செலுத்திவருவதற்காகவும் அவரைப் பாராட்டு கிறேன்.

16th March 1955] [Sri M. Dharmalingam]

1-40 p.m.

"இந்தத் திட்டங்கள் மிகவும் பரந்த நோக்கமுடையன. எல்லாப் பிராந்தியங்களையும், அதுவும் குறிப்பாக பிற்பட்ட பிராந்தியங்கள் எல்லாவற்றையும் முன்னேறச் செய்யவேண்டுமென்ற கருத்தோடு இத்திட்டங்கள் எல்லாம் கொண்டுவரப்படுகின்றன. ஆனால் ஒரு விஷயத்தை மறந்துவிட முடியாது. சர்க்கார் எவ்வளவு லட்சம் ரூபாய் பணத்தை இந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கினாலும்கூட மக்களுடைய ஒத்துழைப்பு இல்லையென்றால் அவை வெற்றியடையா. அதோடு சர்க்கார் எவ்வளவு உயர்ந்த எண்ணத்தோடு இந்தத் திட்டங்களைப் போட்டாலும்கூட அதை அமுலுக்குக் கொண்டுவருகிற அதிகாரிகள் அதனை உணர்ந்து நடந்துகொள்ளவில்லையென்றால் பயன் எதுவும் கிடையாது. அதுவும் இன்றையதினம் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் போடப்பட்டிருக்கும் அதிகாரிகளில் பலருக்கு அவற்றில் அக்கறை இல்லையென்று நான் கூற ஆசைப்படுகிறேன்.

"உதாரணமாக எங்கள் பிராந்தியத்தில் மக்கள் இந்தத் திட்டங்களைப் பூர்ணமாக நிறைவேற்ற சர்க்காருடன் ஒத்துழைக்க முன்வருகிறார்கள். பணத்தால் உதவி செய்யவும் தயாராக இருக்கிறார்கள். தேகத்தால் உழைக்கவும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் அவர்களுடைய ஒத்துழைப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. குறிப்பாக குடிதண்ணீர் கிணறுகளை வெட்டிக் கொடுக்கவேண்டுமென்றால் செலவாகிற தொகையில் அந்தந்தப் பிராந்தியங்களிலுள்ள மக்கள் மூன்றில் ஒரு பங்கு கொடுக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. இதில் அந்தந்த பிராந்தியங்களிலிருந்து ஒரு தலைவர் முன்னுக்கு வந்து பொறுப்பை ஏற்றுக்கொண்டு நடத்தவேண்டும். குறிப்பாக எங்கள் பிராந்தியத்தில் ஒருவரிடம் சென்று, 'நீங்கள் எங்களுடைய தலைவராக இருந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும்' என்று கேட்டுக்கொண்டோம் என வைத்துக்கொள்ளுவோம். அவர்களும் அதற்கு சம்மதித்து மக்களுடைய நன்மையை உத்தேசித்து கைப்பணத்தைப் போட்டோ அல்லது வேறெந்தவிதமாகவோ குடிதண்ணீர் வசதியைச் செய்து முடிக்கிறார்கள். ஆனால் அந்த வேலை முடிந்து ஒரு வருஷம் ஆன பிற்பாடும்கூட அவர் கையை விட்டு செலவு செய்த பணத்தை அரசாங்க அதிகாரிகள் திருப்பிக் கொடுக்க தக்க ஏற்பாட்டை செய்ய முன்வருவதில்லை. இப்படி சில இடங்களில் நடந்துவிடுவதால் அரசாங்கத்திற்கு எவ்வளவு பரந்த நோக்கம் இருந்தாலும்கூட அது காரியத்தில் நிறைவேற்றப்படாமல் போய்விடுகிறது. தங்கள் கைப்பணத்தையும் செலவு செய்துவிட்டு, அதுவும் சர்க்காரிடமிருந்து திரும்பி வரவில்லை என்பதினால் மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென்று விரும்புகிறவர்களும்கூட பின்னுக்குப் போய்விடுகிறார்கள். ஆகவே அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அனாவசியமாக எந்த விஷயத்திலும் கால தாமதம் செய்யாமல், ஆங்காங்குள்ள பிரதேச மக்களுடன் ஒத்துழைத்தால் தான் எந்தத் திட்டமும் மிக வெற்றிகரமாக நடக்கும்.

"அதோடுகூட இந்தத் திட்டத்தின் கீழ் நாம் பல அதிகாரிகளை நியமித்திருக்கிறோமே தவிர அவர்கள் மக்களுக்கு நன்மை செய்வதற்காகவே தங்களை அரசாங்கம் நியமித்திருக்கிறதென்று கருதுவதில்லை. குறிப்பாக தேசீய விஸ்தரிப்பு திட்ட பிரதேசத்திலும், எக்ஸ்டன்ஷன் ஆபீசர், இன்ஸ்பெக்டர், வெட்டரினரி டாக்டர், சோஷல் எஜுகேஷன் ஆபீசர், அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டர், என்பதாக நான்கைந்து உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் செய்கிற வேலை மக்களின் முன்னேற்றத்தை குறித்தது என்பதற்கில்லை. இதனால் மக்களுக்கு குழப்பம்தான். இத்திட்டத்தின்கீழ் கிடைக்கும் கடன் தொகை குறித்த காலத்தில் கிடைப்பது கிடையாது. இதன் பாதி தொகையை அதற்கான அதிகாரிகள் அபகரித்துவிடுகிறார்கள். இது விஷயமாக என்னோடு வந்த ஸ்ரீமான் கோவிந்தசாமி நாயுடுவும் இதைப்பற்றி சொல்லி இருக்கிறார். இதை ஆதரித்து நானும் சொல்லுகிறேன். இது விஷயத்தில் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு இத்தில்லுமுல்லுகளைத் தவிர்க்க தக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

[Sri M. Dharmalingam] [16th March 1955

"குறிப்பாக ஒரு குறிப்பிட்ட வேலையைப்பற்றி ஸ்பெஷல் அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டரிம் போய் கேட்டால், அவர் தாசில்தாரிடம் போய் கேட்கும்படியாகச் சொல்லுகிறார். தாசில்தாரிடம் போய்க் கேட்டால் அது சமுதாய நலத் திட்டப் பிரதேசம். ஆகவே அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டரிடம் போய் கேளுங்கள் என்று சொல்லிவிடுகிறார். இப்படியாக விவசாயிகள் யாரிடம் போய் எதைக் கேட்பது என்று தெரியாமலேயே தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் இந்த சமுதாய நலத் திட்டம், ஸ்தல ஸ்தாபனத் திட்டம் ஆகியவற்றிலும் நாம் ஒதுக்கும் பணத்தில் உத்தியோகஸ்தர்களே பெரும் பகுதியை சாப்பிட்டுவிடுகிறார்கள். இருந்தாலும் அவர்கள் மக்களுடன் ஒத்துழைத்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்யவில்லையென்றால் அரசாங்கத்தின கொள்கையே இவ்விஷயத்தில் ஈடேறாமல் போய்விடும். ஆகவே அமைச்சர் அவர்கள் இவ்விஷயத்தில் அதிகாரிகளுக்கு ஆகும் அனாவசிய செலவை எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ, அவ்வளவு தூரம் குறைப்பதோடு இருக்கக் கூடிய அதிகாரிகள் மக்களுடன் ஒத்துழைத்து அவர்களுடைய ஒத்துழைப்பையும் சரியான முறையில் பெற தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்."

Mr. SPEAKER :—"I now adjourn the House till 8-30 a.m. tomorrow."

The House then adjourned.

LIBRARY 21 DEC 1955 STATE LEGISLATURE, MADRAS

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS